**தேசியக் கல்விக் கொள்கை-2020யின் மூன்று ஆண்டு வெற்றிகரமான அமலாக்கத்தின் நினைவாக இந்திய மொழிகளுக்கான மொழி மற்றும் இலக்கிய வினா உரு தயாரித்தல் குறித்த தேசிய மாரத்தான் 28/08/2023 லிருந்து 11/09/2023 வரை நடைபெறவுள்ளது. ஐந்து மொழிகளில் விண்ணப்பிக்கலாம், விண்ணப்பிக்க கீழேயுள்ள லிங்கை அழுத்தவும்.**

- தமிழ் மொழியில் வினா உரு தயாரித்தல் குறித்த இணையவழி மாரத்தான்

- **என்ன :** இந்தியா முழுவதும், தமிழ் மொழி/மொழியியல்/இலக்கியம் கற்றல் கற்பித்தல் பணியில் ஈடுபட்டுள்ள உதவிப் பேராசிரியர்கள் / விரிவுரையாளர்கள் மற்றும் ஆராய்ச்சி மாணவர்களுக்கு ஐந்து இந்திய மொழிகளில், மொழி மற்றும் இலக்கியத்தில் வினா உரு தயாரித்தல் குறித்த பதினைந்து நாள் இணையவழி தேசிய மாரத்தான்.

- **எப்போது** : 28-08-2023 லிருந்து 11-09-2023 வரை (விண்ணப்பிப்பதற்கான தேதி நீட்டிக்கப்பட்டுள்ளது)

- **நடைபெறும் முறை** : இணையவழி – Google Meet and NTS-I Question Inputting Console

- **இடம்** : இந்திய தேசியத் தேர்வுப்பணி, இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம், மைசூரு.

**தகுதிகள்**

- இந்தியா முழுவதும் உள்ள பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் / அரசு உதவிபெறும் நிறுவனங்கள் / தன்னாட்சி நிறுவனங்களில் தமிழ் மொழி / மொழியியல் / இலக்கியம் கற்றல்-கற்பித்தல் பணியில் ஈடுபட்டுள்ள உதவிப் பேராசிரியர்கள் / விரிவுரையாளர்கள் / ஆராய்ச்சி மாணவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
- அடிப்படை ஆங்கில தகவல்தொடர்பு(communication skills) திறன்கள் அவசியம் தேவை.
- மொழியியல் / மொழியறிவியலில் உயர் பட்டம் பெற்றவர்களுக்கும் இந்திய தேசியத் தேர்வுப்பணியில் நுண்தேர்வு, மதிப்பீடு மற்றும் தமிழில் வினா உரு தயாரித்தல் குறித்த ஐந்து நாள் பயிற்சிப் பட்டறையில் கலந்துக்கொண்டு அடிப்படை பயிற்சி பெற்றவர்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படும்

**அடிப்படை கணினி சார்ந்த தேவைகள்**

- வேலை செய்யும் நிலையிலுள்ள மற்றும் குறைந்தபட்ச தொழில்நுட்ப வசதிகளுள்ள கணினி அல்லது மடிகணினி (Core 2 deo processor, 4GB RAM, OS windows XP, 7 & அதற்கு மேலும், இன்னும் பிற.)
- சீரான இணைய இணைப்பு
- கூகு குரோம், மொஜில்லா பையர்பாக்ஸ், இண்டர்நெட் எக்ஸ்ப்ளோரர் போன்ற உலாவிகளோடு (browsers) யூனிகோட்(unicode) ஒத்துழைக்கும் தன்மையும் அமைந்த கணினி அல்லது மடிகணினி. (பயன்படுத்தப்படும் உலாவி புதுப்பிக்கப்பட்ட தன்மையில் இருக்க பரிந்துரைக்கப்படுகிறது)

**நோக்கங்கள்**

- தேசியக் கல்விக் கொள்கை-2020 -யின் வெற்றிகரமான அமலாக்கத்தின் மூன்றாவது வருட நினைவாக

- பயனாளர்களின் மத்தியில் மதிப்பீட்டின் உள்ளடக்கம், முறைமை, நோக்கம் குறித்து தேசிய அளவில் ஒருமித்த கருத்தையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்தல்.
- மொழி/மொழியியல், இலக்கியத் துறைகளில் பணிபுரியும் உதவிப் பேராசிரியர்கள் / விரிவுரையாளர்கள் / ஆராய்ச்சி மாணவர்களின் தொழில்சார் திறன்களை மேம்படுத்துதல்.

**ஈடாக்கம்**

- வெற்றிகரமாக நிறைவு செய்யும் அனைத்து பங்கேற்பாளர்களுக்கும் கௌரவப்படி ரூ.4,500.00 (ரூபாய் நாலாயிரத்து ஐந்நூறு மட்டும்) வழங்கப்படும். பங்கேற்பாளர்கள் இந்தத் தேசிய மாரத்தானில் தொடக்கம் முதல் இறுதி வரை குறைந்தபட்ச எண்ணிக்கையிலான வினா உருக்களை ஒவ்வொரு நாளும் உள்ளீடு செய்பவர்கள் இந்த கௌரவப் படியைப் பெற தகுதியுடையவர்களாவர்.
- வெற்றிகரமாக நிறைவு செய்யும் அனைத்து பங்கேற்பாளர்களுக்கும் பங்கேற்புச் சான்றிதழ் வழங்கப்படும்.
- வழங்கப்பட்ட தலைப்பின் கீழ் குறிப்பிட்ட பண்பளவைகள் மற்றும் தரவரம்புகளுக்குள் அமைந்த ஏற்புமையுடைய தனித்துவமான வினா உருக்களை உள்ளீடு செய்பவர்(மொழிக்கு ஒருவர் மட்டும்) வெற்றியாளராகக் கருதப்படுவார். வெற்றிபெற்ற பங்கேற்பாளர் மேற்குறிப்பிட்டவைகளுடன் பின்வருமாறு கூடுதலாகவும் சிறப்பிக்கப்படுவர்.
    - விருதுக்கான சான்றிதழ்
    - வெற்றிக் கோப்பை
    - மைசூரில் இயங்கிவரும் இந்திய தேசியத் தேர்வுப்பணியில் (தங்குமிடம், கௌரவப்படி, பயணப்படி மற்றும் மாதம் தோராயமாக ரூ.20-25 ஆயிரம் ஊதியத்தில்) அதிகபட்சம் 2 மாதத்திற்கு வேலை வழங்கப்படும்.

**விதிகள் மற்றும் நிபந்தனைகள்**

- கௌரவப் படியைப் பெற, தேர்ந்தெடுக்கப்பட்ட பங்கேற்பாளர்கள், முறையாகப் பூர்த்தி செய்து கையொப்பமிடப்பட்ட கௌரவப்படிக்கான பற்றுச்சீட்டையும் பான் அட்டை(Pan card) மற்றும் ஆதார் அட்டையின் (Aadhar card) புகைப்பட நகலையும் விரைவு/பதிவு தபால் மூலம் அனுப்ப வேண்டும். 25.08.2023-ஆம் நாள், தேர்வுப் பட்டியலோடு (அஞ்சல் முகவரியுடன்) கௌரவப்படிக்கான பற்றுச்சீட்டும் (பணம் பெறுவதற்கான) வங்கிப் படிவத்தின் மென்நகல்களும் எங்களது அலுவல் வலைதளப்பக்கத்தில் பதிவேற்றப்படும். பெறப்படும் கௌரவ படி (ITR-வருமான வரி) விலக்குக்கு உட்பட்டது.
- தேவைப்படும் இடங்களில், பங்கேற்பாளர்கள், இந்திய தேசியத் தேர்வுப்பணி (NTS-I) வழங்கிய தேர்வு மற்றும் மதிப்பீட்டின் அடிப்படைப் பயிற்சித் திட்டத்தில் பயிற்சிபெற்றமைக்கான பங்கேற்புச் சான்றிதழின் ஊடறிச் செய்யப்பட்ட மென்நகலை (scanned copy) சான்றாக சமர்ப்பிக்க வேண்டும்.
- நாள்தோறும் குறைந்தபட்சம் 20 ஏற்புமையுடைய வினா உருக்களைத் தவறாமல் உள்ளீடு செய்ய வேண்டும். ஒரு பங்கேற்பாளர் ஒரு நாளில் 20-க்கும் குறைவான வினா உருக்களை உள்ளீடு செய்தால், அவர் மாரத்தானில் இருந்து தகுதி நீக்கம் செய்யப்படுவார். (ஒருநாள் என்பது 12:00AM முதல் 11:59PM வரை கணக்கிடப்படும்). மேலும் அவர் கௌரவப்படியோ வெகுமதியோ பெற தகுதி அற்றவர் ஆவார்.
- உள்ளீடு செய்யப்படும் வினா உருக்கள் எந்த ஒரு வினா வங்கியிலிருந்தோ அல்லது, வழிகாட்டி புத்தகம் போன்றவற்றிலிருந்தோ நகலெடுக்கப்பட்டதாக இருக்கக் கூடாது.

- ஒரு பங்கேற்பாளர் எந்த நேரத்திலும் வினா உருவை உள்ளீடு செய்யலாம். ஆனால் தொழில்நுட்ப மற்றும் கல்விசார் உதவிகள் அலுவலக நேரங்களில் மட்டுமே கிடைக்கும் (வேலை நாட்களான திங்கள் முதல் வெள்ளி வரை, காலை 09:30 மணி முதல் மாலை 5:30 மணி வரை).
- விரிவான வழிகாட்டுதல்களுடன் தேவையான பயிற்சி மாரத்தானின் முதல்/இரண்டாம் நாளில் வழங்கப்படும்.
- இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம் மற்றும் அதன் துணைமைய கல்விசார் பணியாளர்களும் அதிகாரிகளும் இதற்கு விண்ணப்பிக்கலாம்; ஆனால் அவர்களுக்கு கௌரவப்படி வழங்கப்படமாட்டாது. எனினும் மற்ற அனைத்து விதிகளும் நிபந்தனைகளும் பொருந்தும்.
- இந்திய மொழிகளின் நடுவண் நிறுவத்தின் பல்வேறு அலகுகள்/திட்டங்கள்/மையங்கள்(இந்திய தேசியத் தேர்வுப்பணி தவிர) ஒப்பந்த முறையில் பணிபுரியும் வள நபர்கள்/பணியாளர்கள் உரிய வழிமுறையோடு விண்ணப்பிக்கலாம்; எனினும் அவர்களுக்குக் கௌரவப்படி வழங்கப்படமாட்டாது. மேலும் மற்ற அனைத்து விதிகளும் மற்றும் நிபந்தனைகள் பொருந்தும்.

## குறிப்பு

- மாரத்தான் Google Meet மூலம் நடத்தப்படுவதால், பங்கேற்பாளர்கள் அனைவருக்கும் சரியான மின்னஞ்சல் கணக்கு (Gmail-லாக இருத்தல் நலம்) இருக்க வேண்டும்.
- தமிழ் தட்டச்சு செய்வதில் தேர்ச்சி பெற்றிருப்பது இம்மாரத்தானில் பங்கு பெறுவதற்கான முக்கிய அளவுகோலாகும்.
- தேர்ந்தெடுக்கப்பட்டோர் பட்டியல் 25.08.2023 அன்று இணையதளத்தில் பதிவேற்றப்படும்.
- மாரத்தானில் பங்கேற்கும் அனைத்து பங்கேற்பாளர்களும் அதிகாரிகளால் வகுக்கப்பட்ட நடத்தை நெறிமுறைகள்/வழிகாட்டுதல்களுக்குக் கட்டுப்பட வேண்டும். இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனமானது இந்திய அரசின் கல்வி அமைச்சகத்தின் கீழ் செயல்படும் ஒரு துணை அலுவலகமாகும். இந்நிகழ்வின் போது ஏதேனும் விதிமீறல்/தவறான நடத்தை நடைபெற்றால் நிறுவனம் / இந்திய அரசின் விதிகளின்படி கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
- காரணத்தைக் குறிப்பிடாமல் எந்தவொரு விண்ணப்பத்தையும் ஏற்கவும் நிராகரிக்கவும் நிறுவனத்திற்கு உரிமை உள்ளது.
- எந்தவொரு காரணமும் கூறாமல் இந்தத் திட்டத்தை முன்கூட்டியே நடத்தவோ அல்லது ஒத்திவைக்கவோ அல்லது முழுவதுமாக ரத்துசெய்யவோ நிறுவனத்திற்கு உரிமை உள்ளது.

## எப்படி விண்ணப்பிப்பது?

- தமிழ் மொழியில் வினா உரு தயாரித்தல் குறித்த இணையவழி மாரத்தானில் கலந்துகொள்ள விருப்பமுள்ளவர்கள் இந்தப் பக்கத்தின் கீழே உள்ள "ஆன்லைன் பதிவு" என்ற இணைப்பை அழுத்தி விண்ணப்பிக்கலாம். இணையவழியில் விண்ணப்பிக்கும் போது படிநிலைகளைக் கவனமாகப் பின்பற்றவும். இறுதி கட்டத்தில் உங்கள் பதிவுப் படிவத்தின் PDF கோப்பு, பதிவு செய்யப்பட்ட உங்கள் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்படும். இணையவழி பதிவிற்கான இணைப்பு(link) 25.08.2023 அன்று மூடப்படும். (காலை 11.30-க்கு முன்).